அ.வ.எண்: 112/2014 நாள்: 01.08.2026

பி.வா.சா.2 –வளர்மதி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சுப்புராயன் என்பது யார் என்றால், எனது எனது தகப்பனாரை பெற்ற தாத்தாவின் அப்பா ஆவார். முத்தையா என்ற முத்துசாமி மகன் வேலு என்ற வேலுசாமி என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். யார் மூலமாக மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தேன் என்றால் 4–ம் பிரதிவாதி மூலமாக தாக்கல் செய்தேன். மேற்படி ஆவணங்களை நான் எப்பொழுது 4–ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன் என்றால், ஒரு வருடத்திற்கு முன்பாக கொடுத்தேன் தேதி மாதம் நினைவில் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு, நான் ஒரு வழக்கறிஞர் மூலம் ஆஜராகி இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நானும் எனது மகனும் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி 2 இலக்க சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் 4–ம் பிரதிவாதியிடம் கொடுத்த ஆவணங்களான பி.வா.சா.ஆ.1 முதல்

பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் அனைத்திலும் முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். எந்த ஆவணத்திலும் முத்தையா என்ற முத்துச்சாமி அம்பலம் மகன் வேலு என்ற வேலுச்சாமி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆரம்பத்தில் 6 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து ஒரே வழக்கறிஞர் தான் ஆஜராகி, ஒரே எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் அது பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது. நான் அருளானந்து என்பவருக்கு முத்துகிருஷ்ணன், புஷ்பவள்ளி, வளையாபதி ஆகிய நால்வருடன் சேர்ந்து வா.சா.ஆ.14 ஆவணமான ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்து உள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன மற்ற மூன்று நபர்கள் யார் என்றால் பங்காளிகள், அவர் எந்த முறையில் பங்காளிகள் என்றால், எனது தாத்தா உடன் சேர்ந்து கூட்டு பட்டாதாரர்களாக இருந்ததால் பங்காளிகள் ஆவர். எனது தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக இறந்தார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழில் முத்தையா அம்பலம் மகன் வேலு அம்பலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். 24.12.1989 அன்று எனது தகப்பனார் ஆலங்குடி கிராமத்தில் இறந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 ஆவணத்தில் முத்தையா வேலு அம்பலம் என்றுதான் உள்ளது என்றால் சரிதான்.எனது தகப்பனாருக்கு நான் மற்றும் புஷ்பவல்லி ஆகியோர் 2 வாரிசுகள் என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்கள் அனைத்திலும் தாவா

சொத்துக்களுக்கு முத்துச்சாமி அம்பலம் குமாரர் வேலு அம்பலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான்,

4. வா.சா.ஆ.7 ஆவணமான நான் 4-ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரத்தில் உள்ள 10(1) அடங்கலில் முத்துச்சாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். அதை வைத்து தான் நான் 4-ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை விற்பனை செய்து அக்கிரம லாபம் அடைய வேண்டும் என்பதற்காக, எனது தகப்பனாரின் பெயரான முத்தையா அம்பலம் குமாரர் வேலுச்சாமி அம்பலம் என்பதற்கு பதிலாக, முத்தையா என்ற முத்துச்சாமி அம்பலம் குமாரர் வேலு என்ற வேலுச்சாமி அம்பலம் என தற்போது பொய்யாக எதிர்வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 1-ம் வாதி தனலட்சுமியின் தகப்பனாரின் ஆவணங்கள் என்றும், எங்களது ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. என்னுடைய வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்திலும் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.8 ஆவணத்தில் சர்வே எண். 528/5-ற்கு பட்டா எண் 962-ல் மு. வேலு அம்பலம் என முத்துச்சாமி அம்பலம் குமாரர் வேலு அம்பலம் பெயருக்குத்தான் பட்டா உள்ளது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் எனது சொத்தாக சர்வே எண் 518/4,518/5-க்கு பழைய

பட்டா எண். 2122–ல் செ.முத்துகிருஷ்ணன் அம்பலம், மு.வேலுச்சாமி அம்பலம், வெ.கருப்பாயி ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தமான சர்வே எண்.518/6–க்கு பட்டா எண் 1781–ல் மு.வேலு அம்பலம் முத்துச்சாமி அம்பலம் குமாரர் வேலு அம்பலம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் பட்டா எண்.2150–ல் சர்வே எண் 519/6 சொத்திற்கு முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம், முத்தையா அம்பலம் மகன் இடும்பன் அம்பலம், செல்லச்சாமி அம்பலம் மகன் முத்துகிருஷ்ணன் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி முத்தையா அம்பலம் மகன் இடும்பன் அம்பலம் எனது சித்தப்பா என்றால் சரிதான். நான் அருளானந்திற்கு எழுதிக் கொடுத்த வாசாஆ.14 ஆவணமான கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ள எனது சித்தப்பாவான இடும்பன் அம்பலம், முத்தையா அம்பலம் மகன் இடும்பன் அம்பலம் என்று கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு மற்றொரு பெயராக முத்துச்சாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்ற பெயர் இருந்திருந்தால் எனது சித்தப்பாவான இடும்பன் அம்பலம் அவ்வாறு கையெழுத்து செய்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக இருந்தால் அதை இடும்பன் அம்பலமும் சேர்ந்துதான் கிரையம் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும் என்றும், நான் மட்டும் தன்னிச்சையாக 4–ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என்றும் சொன்னால்

சரியல்ல.

7. மேற்படி வா.சா.ஆ.14 ஆவணத்தில் கண்டுள்ள முருகேசன் மனைவி வளையாபதி என்பது யார் என்றால் அவரும் கூட்டு பட்டாதாரர் ஆவார். அவர் எதற்காக கையெழுத்து செய்துள்ளார் என்றால் அவரது ஆயாவின் சொத்துக்களுக்காக அவர் கையெழுத்து செய்துள்ளார். தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்களாக இருந்திருந்தால் எனது சகோதரி புஷ்பவள்ளி என்பவரும் சேர்ந்து கையெழுத்து செய்திருக்க வேண்டும் என்றால், அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் மட்டும் கையெழுத்து செய்தேன். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றால் நான் என்னுடைய பாகத்தை மட்டும் தான் எழுதிக் கொடுக்க முடியும் என்றும் அவரது பாகத்தை எழுதிக் கொடுக்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. வா.சா.ஆ.7 ஆவணமான கிரைய பத்திரத்தில் எந்த இடத்திலும் எனது சகோதரியை பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எல்லாவற்றையும் நான் தான் பார்த்து வந்தேன். தாவா சொத்துக்களை நான் மோசடியாக விற்பனை செய்ததை நிரூபிப்பதற்காக தான் அந்த கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.14 ஆவணமாக வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் எனது தந்தையின் பெயர் இருந்ததால்தான் எனது பெற்றோரின் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் கருப்பாயி என்பவர் இறப்பு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்து எனது தகப்பனாருக்கு

பாத்தியப்பட்டதாக இருந்திருந்தால், அவரது இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்திருப்போம் என்றும், அது எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லாததால் தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

9. உண்மையிலேயே எனது பெயரில் எல்லா ஆவணங்களும் இருந்திருந்தால் அவற்றை நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்பொழுதே தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளிடம் சமாதானம் பேசுவதாக சொல்லி ஆவணங்களை கொண்டுவர சொல்லி, அதை பெற்றுக்கொண்டு திரும்ப கொடுக்காமல் 4–ம் பிரதிவாதியிடம் அந்த ஆவணங்களை கொடுத்து தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்திக் கொடுத்த கிரையை ஆவணத்தில் முத்தையா என்ற முத்துசாமி அம்பலம் மகன் வேலு என்ற வேலுச்சாமி அம்பலம் என்று எங்கும் குறிப்பிடவில்லை என்பதால், நான் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

10. 1–ம் வாதியின் தாயார் காளியம்மாள் என்பவர் 1–ம் வாதியின் சகோதரியான சீதை என்பவருக்கு, 1958 ஆம் ஆண்டில் எழுதி வைத்த உயில் சாசனத்தில் 6 கிராமங்களில் உள்ள சொத்துக்களை குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றும், அதில் தாவா சொத்தும் அடங்கும் என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று 1–ம் வாதியின் சகோதரி சீதை 1–ம் வாதிக்கு 1963 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த ஆவணத்திலும் 6 கிராமத்தில் உள்ள சொத்துக்கள் கண்டு

எழுதப்பட்டுள்ளது என்றும், அதில் தாவா சொத்து அடங்கும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகளுக்கு SLR காலத்திலும், UDR காலத்திலும், தற்போதைய காலத்திலும் முத்துசாமி அம்பல மகன் வேலு அம்பலம் என்பவரது பெயர்தான் பதிவுகள் உள்ளது என்றும், எனது தகப்பனார் பெயரில் பதிவுகள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11. எனது தகப்பனார் பெயரில் உள்ள பதிவுகளில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி என்பதை தவிர முத்துசாமி அம்பலம் மகன் வேலு அம்பலம் என்று எந்தவித பதிவுகளும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் 4–ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் ஆனது மோசடி ஆவணம் என்பதை தெரிந்ததால்தான் எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்யாமல் எழுதிக் கொடுத்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் சரியான ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளதால், வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்தாக இருந்தால் எனது தகப்பனாருடன் பிறந்தவரான இடும்பன் அம்பலம் மற்றும் மேற்படி இடும்பன் அம்பலத்தின் மகனான ஆதீனமிளகி அம்பலம் ஆகிய வரும் சேர்ந்துதான் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

12. அதனால் வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் நான் 4–ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல

என்று சொன்னால் சரியல்ல. அது மோசடி ஆவணம் என்பதால் தான் கிரையம் பெற்ற 4–ம் பிரதிவாதி 2025 ஆம் ஆண்டில் மோசடியாக பட்டா மாற்றம் செய்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி தற்போது எங்கு உள்ளார் என்றால் சென்னையில் உள்ளார். அவர் எத்தனை வருடங்களாக சென்னையில் இருந்து வருகிறார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அவர் சுமார் 20 வருடங்களாக சென்னையில் தான் இருந்து வருகிறார் என்றும், இங்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, தற்போது தான் சென்னையில் இருந்து வருகிறார். அவரும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடன் கூட்டு சேர்ந்து கொண்டு வஞ்சக கூட்டாக இந்த ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தி உள்ளார் என்றும், அவர் தாவா சொத்தை எந்த காலத்தில் அனுபவம் செய்யவில்லை என்றும், தாவா சொத்து கருவேலமரங்கள் மண்டி உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

13. அதனால்தான் அவர் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றும், எனது தூண்டுதலின் பெயரில் 2025 ஆம் ஆண்டு தான் பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர் வழக்குரையும் என்னுடைய சாட்சியமும் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.08.01 15:32:53 +0530